

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | facebook.com/murasoli180 | twitter.com/murasoli180 | instagram.com/murasoli180 | youtube.com/murasoli180 | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 - முரசு : 82 - ஒலி : 6 - திருவள்ளுவர் ஆண்டு 2054 - ஆடி 30 - செவ்வாய்க்கிழமை 15 ஆகஸ்ட் 2023 - கோவை ★★ 12 பக்கங்கள் | Established : 10.8.1942 - Volume : 82 - Issue 6 : Thiruvalluvar Year - 2054 - Aadi 30 - Tuesday 15 August 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கான

# ஊட்டச்சத்து குறைபாடில்லா திட்டம் மாபெரும் வெற்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மகிழ்ச்சி செய்தி!

**சென்னை, ஆக. 15 -**

**தமிழ்நாட்டில் மெலிந்த குழந்தைகளுக்காக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டம் மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. இத்திட்டம் வெற்றி பெற்றதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒரு சிறப்பு காணொலியை வெளியிட்டார். மேலும் முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில், மிகவும் மெலிந்த குழந்தைகளின் நிலையை மாற்ற வேண்டுமென உடனே தொடங்கப்பட்ட 'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டம் மாபெரும் வெற்றி பெற்றுள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இதுபற்றிய விபரம் வருமாறு: -

ஆரோக்கியமான குழந்தைகளே, நாட்டின் வளமான எதிர்காலம் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7.05.2022 அன்று சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை நலமுடன் வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன், மாநில அளவில் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்ய இருக்கிறோம் என்றும், மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கு மருத்துவ உதவியும், ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் ஒன்றும் செயல்படுத்திட அரசு முடிவெடுத்துள்ளது என்றும் அறிவித்தார்.



'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டத்தின் கீழ், குழந்தைகளின் வளர்ச்சியை கண்டறிவதற்கான சிறப்பு மருத்துவ முகாமை நீலகிரி மாவட்டம், தொட்டபெட்டா ஊராட்சி முத்தோரை குழந்தைகள் மையத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.5.2022 அன்று தொடங்கி வைத்தார்.

**9.3 இலட்சம் குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை!**

இத்திட்டத்தின் கீழ், 6 வயது வரையுள்ள மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 9.3 இலட்சம் குழந்தைகள் RBSK குழுவினரால் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டார்கள். அதில் 43,200 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை உட்பட வெவ்வேறு மருத்துவச் சிகிச்சைகள் மாவட்ட ஆரம்ப சிகிச்சை மையங்களில் அளிக்கப்பட்டது.

6 மாதம் முதல் 6 வயதுடைய கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு உண்பதற்கு தயாராக உள்ள சிகிச்சை உணவு (Ready to Use Therapeutic Food RUTF) 8 வாரங்களுக்கு அளிக்க ரூபாய் 18.68 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டது. அதேபோன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையினால் ஊட்டச்சத்து குறைபாடுடைய 6 மாதக் குழந்தைகளின் தாய்மார்களுக்கு ரூபாய் 8.68 கோடி செலவில் சத்துப் பெட்டகம் (Nutri Kit) வழங்கவும் ஆணையிடப்பட்டது.

**குழந்தைகளின் வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம்!**

6 மாதம் முதல் 6 வயதுடைய கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 92,015 குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை உணவு அளிக்கப்பட்டதில் 61,788 (66.6%) குழந்தைகள் ஊட்டச்சத்து நிலையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். அதேபோன்று 6 மாதக் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 14,901 குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்கள் பிறப்பு கூடுதல் சத்து உட்கொண்டதினால் 13,319 (89.4%) குழந்தைகளின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

அனைத்துக் குழந்தைகளின் வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளின் வளர்ச்சியில் முன்னேற்றத்தினைக் கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல் குழந்தையின் வளர்ச்சியில் குறிப்பாக முதல் 6 மாதத்தில் ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தினைப் பற்றி மிகுந்த விழிப்புணர்வினை உருவாக்கியுள்ளது.

**ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம் வெற்றி! காணொலி வெளியீடு!**

இந்நிலையில் "ஊட்டச் சத்தை உறுதி செய்" திட்டம் அடைந்துள்ள பெரும் வெற்றி பற்றிய ஒரு சிறப்பு காணொலியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

இந்த "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டம் அடைந்துள்ள பெரும் வெற்றி பற்றிய ஒரு சிறப்பு காணொலியை வெளியிட்டதை குறித்து முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**பல்வேறு மாவட்டங்களுக்கு நான் ஆய்வுப் பணிகளுக்கு செல்லும்போது, ஓர் அங்கன்வாடி மையத்தில், மிகவும் மெலிந்த ஒரு குழந்தையைப் பார்த்தேன். அதற்கு காரணம் என்னவென்று கேட்டபோது, ஊட்டச்சத்துக் குறைபாடு என்றார்கள். மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் நாம் நல்ல நிலையில் இருக்கிறோம் என்று நான் சமாதானம் அடைய விரும்பவில்லை. அந்த நிலையை மாற்ற வேண்டும் என உடனே தொடங்கப்பட்ட திட்டம்தான் "ஊட்டச்சத்தை உறுதிசெய்" திட்டம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

## மத்திய பிரதேசம்

# பா.ஜ.க. அரசு மீது ஊழல் புகார் எதிரொலி!

## பிரியங்கா காந்தி மீது வழக்குப் பதிவு!

*போபால், ஆக. 15 -*

மத்திய பிரதேச ஆளும் பா.ஜ.க. அரசுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகளை சமூக ஊடகத்தில் பதிவிட்ட காங்கிரஸ் பொதுச் செயலர் பிரியங்கா காந்தி மீது அம்மாநில அரசு வழக்குப் பதிவு செய்துள்ளது.



மாநில அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு 50 சதவீத கமிஷனை வழங்கிய பின்னரே தங்களுக்கான நிதி அளிக்கப்படுவதாக மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த அரசு ஒப்பந்ததாரர்கள், உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதாக பிரியங்கா காந்தி ட்விட்டர் பதிவொன்றை வெளியிட்டிருந்தார். மேலும், கர்நாடக மக்கள், 40 சதவீத கமிஷன் அரசை ஆட்சியிலிருந்து நீக்கியது போல், மத்திப்பிரதேச மக்களும் 50 சதவீத கமிஷன் அரசை ஆட்சியிலிருந்து நீக்குவார்கள் என்றும் பதிவிட்டிருந்தார். கமல் நாத் உள்ளிட்ட மாநில காங்கிரஸ் தலைவர்களும் இதே போன்ற பதிவை வெளியிட்டிருந்தனர். இந்நிலையில், இந்தூர் மாவட்ட பா.ஜ.க.வின் சட்டப் பிரிவைச் சேர்ந்த நிமேஷ் பாடக், காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதையடுத்து, இந்திய தண்டனையியல் சட்டப் பிரிவுகளின்கீழ், பிரியங்கா காந்தி, கமல் நாத் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களுடைய பதிவுகளின் உண்மைத் தன்மை குறித்து ஆராய்ந்து வருவதாக போலீசார் தெரிவித்தனர்.

---

# தமிழ்நாட்டில் மழைக்கு வாய்ப்பு!

*சென்னை, ஆக. 15-*

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, 19.08.2023 வரை: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.




சென்னையை பொறுத்தவரை அடுத்த இரு தினங்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## காவிரியில் தண்ணீர் திறந்துவிட

# கர்நாடக அரசுக்கு உத்தரவிடக்கோரி வழக்கு!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல்!

*புதுடெல்லி, ஆக. 15 -*

காவிரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடகத்திற்கு உத்தரவிடக்கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசால் வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது.

இதுகுறித்து விவரம் வருமாறு :-

தமிழ்நாட்டில் காவிரி நீரை நம்பி விவசாயிகள் குறுவை சாகுபடி செய்து உள்ளனர். ஆனால் கர்நாடக அரசு, தமிழ்நாட்டுக்கு முறைப்படி தர வேண்டிய தண்ணீரை தரவில்லை.

இதன் காரணமாக தஞ்சை உள்ளிட்ட காவிரி டெல்டா மாவட்டங்களில் பயிர்கள் காய்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை உணர்ந்து உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட காவிரி நீர் ஒழுங்குமுறை குழு மற்றும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் ஆகிய 2 அமைப்புகளும் விரைந்து செயல்பட வேண்டும் என்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், மத்திய நீர் வளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்தை 2 முறை சந்தித்து கோரிக்கை விடுத்தார்.

மேலும் காவிரியில் கர்நாடக அரசு தண்ணீர் திறக்க உத்தரவிட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதினார்.

இந்த சூழ்நிலையில் காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பங்கேற்ற தமிழக, கர்நாடக அதிகாரிகளுக்கு இடையே விவாதம் நடைபெற்றது. அப்போது கர்நாடக அதிகாரிகள் மிரட்டும் தொனியில் பேசியதால், தமிழக அதிகாரிகள் வெளிநடப்பு செய்தனர். பின்னர் காவிரியில் 10 ஆயிரம் கனஅடி நீர் திறக்க அதிகாரிகள் உத்தரவிட்டதாக தகவல் பரவியது. ஆனால் அதி காரப்பூர்வமாக அறிவிக்கவில்லை.



இந்த நிலையில் காவிரி நீர் பங்கீட்டு பிரச்சினையில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதை தவிர வேறு வழியில்லை என்று அமைச்சர் துரைமுருகன் அறிவித்து இருந்தார்.

**உச்சநீதிமன்றத்தில் வழக்கு**

காவிரியில் தண்ணீர் திறக்க முடியாது என்று கர்நாடகம் பிடிவாதம் பிடித்து வரும் நிலையில், இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசால் வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது.

முன்னதாக, சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள தனது வீட்டில் வைத்து துரைமுருகன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவரிடம், செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

**கேள்வி:** காவிரி நதிநீர் பெறுவது குறித்து உச்சநீதிமன்றத்தை நாடுவதாக தெரிவித்துள்ளீர்கள். நீதிமன்றத்தில் நீதி கிடைக்கும் என நம்புகிறீர்களா?

**பதில்:** உச்சநீதிமன்றத் தில் நீதி கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது.

**ஆணையத்தின் செயல் திருப்தி அளிக்கவில்லை!**

**கேள்வி:** டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி பயிர்கள் கருகி வருகிறதே?

**பதில்:** நடவடிக்கை எடுக்க வேண்டியது காவிரி நீர் மேலாண்மை ஆணையம்தான். ஆனால் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. 15 ஆயிரம் கன அடி நீர் தருவதாக சொன்னார்கள். ஆனால் இப்போது அதையும் குறைக்கிறார்கள்.

**கேள்வி:** காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் செயல்பாடு திருப்திகரமாக உள்ளதா?

**பதில்:** எனக்கு திருப்தி அளிக்கவில்லை.

**பேச்சுவார்த்தை!**

**கேள்வி:** கர்நாடகாவில் தண்ணீர் பற்றாக்குறை இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளதே?

**பதில்:** கர்நாடகாவில் 82 சதவீதம் நீர் உள்ளது என்று நேற்று (நேற்று முன்தினம்) அறிக்கை கொடுத்து விட்டேன்.

**கேள்வி:** காவிரி பிரச்சினை குறித்து கர்நாடக அரசுடன் நேரடியாக பேசுவீர்களா?

**பதில்:** கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த என்ன இருக்கிறது?.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் பதில் அளித்தார்.

---

## மாநில உரிமைகளைக் காப்பதிலும், எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைப்பதிலும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முனைப்புடன் செயல்படுவதால்

# தி.மு.க.வை - மோடியும், பா.ஜ.க.வினரும் குறிவைக்கிறார்கள்!

## மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி என்.சிவா கடும் குற்றச்சாட்டு!

**சென்னை, ஆக. 15 -**

**மாநில உரிமைகளைக் காப்பதிலும், எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைப்பதிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முனைப்புடன் செயல்படுவதால் தி.மு.க.வை மோடியும் - பா.ஜ.க.வினரும் குறிவைக்கிறார்கள் என்று மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி என். சிவா செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் கடும் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

மணிப்பூர் விவகாரம் குறித்தும், டெல்லி மாநில அரசின் அதிகாரத்தைப் பறிக்கும் சட்டத்தை எதிர்த்தும் நாடாளுமன்றத்தில் தி.மு.க. குரல் எழுப்பியது. மணிப்பூர் விவகாரத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு மிகுந்த அலட்சியத்துடன் நடந்து கொண்டது, நாட்டில் ஏற்படும் உயிர்சேதங்களுக்கு பதிலளிக்க வேண்டியது பிரதமரின் கடமை. மணிப்பூர் விவகாரம் குறித்து எதிர்க்கட்சிகள் எழுப்பிய எந்தக் கேள்விகளுக்கும் பிரதமர் மோடி பதிலளிக்கவில்லை.

**எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு பதில் இல்லை!**

அவை நிகழ்வுகளையெல்லாம் ஒத்திவைத்துவிட்டு மணிப்பூர் தொடர்பாக பிரதமர் ஒரு அறிக்கை தர வேண்டும்.

நாங்கள் விவாதத்தில் வைத்திருக்கின்ற கருத்துக்களை, எங்கள் தரப்பில் இருக்கின்ற குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்ல வேண்டும். இதுதான் நாடாளுமன்ற ஜனநாயகம் என்று சொன்னோம்.

ஆனால், பிரதமர் அவைக்கு வர மறுத்தார், மாறாக உள்துறை அமைச்சர வர வைக்கிறோம். நீங்கள் இரண்டரை மணி நேரம் குறுகிய கால விவாதம் எடுத்துக்கொள்ளுங்கள் என்கிறார்கள். ஆனால், நாங்கள் அதற்கு இசைவு தெரிவிக்கவில்லை, காரணம் பிரதமர் என்பவர் இந்த நாட்டின் உச்சபட்ச பொறுப்பில் இருப்பவர், ஒரு பகுதியில் ஒரு உயிருக்குச் சேதம் என்றால்கூட பதற வேண்டிய பொறுப்பு பிரதமருக்கு உண்டு.

**பா.ஜ.க.வை எதிர்கொள்ளும் திறன் நம் முதல்வருக்கு உண்டு!**

நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தாமல் முக்கிய மசோதாக்களை ஒன்றிய அரசு நிறைவேற்றியுள்ளது. இது நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு எதிரானது. மாநில உரிமைகளைக் காப்பதிலும் எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைப்பதிலும் முனைப்புடன் செயல்படுவதால் தி.மு.க.வை பிரதமரும் பா.ஜ.க. வினரும் குறிவைக்கின்றனர். இந்தியா என்ற பெயரில் எதிர்க்கட்சிகள் அமைத்துள்ள கூட்டணி ஒற்றுமையாகவும் வலிமையாகவும் உள்ளது. தேர்தலுக்கு முன்பே சாணக்கியத்தனமாக அரசியல் செய்து எதிர்க்கட்சிகளை ஒன்று சேர்த்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்து, பா.ஜ.க.வை எதிர்கொள்ளும் திறன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உண்டு.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசியபோதுகூட சன்சத் தொலைக்காட்சி காட்டவில்லை. பிரதமர் மோடி பேசியபோது எதிர்க்கட்சிகள் தெரிவித்த எதிர்ப்பை சன்சத் தொலைக்காட்சி ஒளிபரப்பவில்லை.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் செய்வது சரியா? தவறா? என்பதை மக்கள் முடிவு செய்துகொள்ளட்டும். மக்களவை, மாநிலங்களவையில் சட்டம் ஒரே நாளில் நிறைவேற்றப்பட்டதாக வரலாற்றில் இல்லை.

**'இந்தியா' கூட்டணி ஆட்சிக்கு வரும்!**

இந்தியா கூட்டணி நிச்சயம் ஆட்சிக்கு வரும். அப்போது 'நீட்' தேர்வு முடிவுக்கு வரும். ஜெயலலிதா விவகாரம் குறித்து ஒன்றும் அறியாமல் நிர்மலா சீதாராமன் பேசி வருகிறார். ஜெயலலிதா மருத்துவமனையில் இருந்தபோதுதான் நிர்மலா சீதாராமன் அமைச்சராக இருக்கிறார் என்பதே தெரியவந்தது.



மத்திய அமைச்சர்கள் நாடாளுமன்றத்தில் எதை வேண்டுமானாலும் பேசுவார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதை உரிமைக் குழுவுக்கு அனுப்புவதன் மூலம் ஒன்றிய பா.ஜ.க. அரசு மிரட்டல் விடுக்கிறது.

மணிப்பூர் மாநிலத்தில் 100 நாட்களுக்கு மேலாக பதட்டம் நிலவுகிறது. 150க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1 லட்சம் பேர் இடம் பெயர்ந்து பதுங்கி வாழ்கின்றனர்.

இப்போது ஒரு தகவல் வெளிவந்துள்ளது. மணிப்பூரைச் சேர்ந்த 230 பேர் மியான்மர் காடுகளில் தவிக்கின்றனர்.

**கவலைப்படாத பிரதமர்!**

மணிப்பூர் விவகாரத்தில் பிரதமரின் விளக்கம் தேவை என்பதே எதிர்க்கட்சிகளின் ஒருமித்த கோரிக்கையாக இருந்தது. ஆனால் பிரதமர் மோடி 2 நிமிடம் மட்டுமே மணிப்பூர் பற்றி பேசி உள்ளார். பெண்கள் அவமானப்படுத்தப்பட்டது பற்றி விளக்கம் அளிக்கவில்லை.

மணிப்பூர் பிரச்சினை முடிந்து விட்டது போல நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு விளக்கம் அளிக்கிறது. மணிப்பூர் பற்றி பிரதமர் மோடி ஒரு நாளும் கவலைப்படவில்லை. தி.மு.க.வை கண்டு பிரதமர் மோடி, உள் துறை அமைச்சர் அமித்ஷா அச்சம் அடைந்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தாமல் மசோதாக்கள் நிறைவேற்றப்படுகின்றன. பல குற்றங்களுக்கு தண்டனைகள் குறைப்பு, 42 சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவந்துள்ளது பா.ஜ.க. அரசு. எதிர்க்கட்சிகளை விமர்சிக்கும் அரசாக மட்டுமே பா.ஜ.க. செயல்பட்டு வருகிறது.

மணிப்பூர் கலவரத்தில் பலர் உயிரிழந்துள்ளனர், பலர் காடுகளில் பதுங்கி வாழ்ந்து வருகின்றனர். மணிப்பூர் கலவரம் குறித்து நாடாளுமன்றத்தில் விளக்கம் அளிக்காமல் பொறுப்பற்ற முறையில் பிரதமர் மோடி செயல்படுகிறார். நாட்டின் பிரச்சினைகளை தீர்க்காமல், அலட்சியமாக செயல்பட்டு வருகிறார் பிரதமர் மோடி.

**பா.ஜ.க.வுக்கு அச்சம்!**

உள்துறை அமைச்சர் அமித்ஷா மணிப்பூர் சென்றுவந்தால் பிரச்சினை முடிந்துவிட்டதாக ஒன்றிய அரசு கூறுகிறது. இந்தியா கூட்டணி பெயரை கேட்டாலே பா.ஜ.க. அரசுக்கு கோபம் வருகிறது.

நாடாளுமன்றத்தை முடக்க வேண்டும் என்பது எங்கள் நோக்கம் அல்ல; மணிப்பூர் கொடூரம் குறித்து பிரதமர் மோடி பேச வேண்டும் என்பதற்காகவே குரல் எழுப்பினோம்.

மாநில கட்சியான தி.மு.க. மீது நாடாளுமன்றத்தில் பிரதமர், உள்துறை அமைச்சர் விமர்சனம் வைக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு அச்சம் இங்கு தான் உள்ளது. தமிழ்நாட்டில் அவர்கள் நினைத்ததை சாதிக்க முடியாது என்பதை கடந்த காலத்தில் நிரூபித்துள்ளோம், வரும் தேர்தலிலும் நிரூபிப்போம்.

இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. பேட்டியளித்தார்.